செய்தி வெளியீடு எண்:597 நாள்: 08.11.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.11.2013 அன்று தலைமைச் செயலகத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியங்களில் பயிற்சி அளிக்கும் வகையில் 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மூலப் பொருட்களும், உபகரணங்களும் அடங்கிய பெட்டியை 7 மகளிருக்கு வழங்கி பயிற்சித் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

தமிழகத்தின் பாரம்பரிய பெருமைகளை வெளிப்படுத்தும் கைத்திறத் தொழில்களில் தஞ்சாவூர் ஓவியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இக்கலையை பரவலாக்கும் வண்ணமும், வீட்டிலுள்ள மகளிர் இந்தக் கலையை கற்று சுயமாக சம்பாதிப்பதற்கு வழிவகை செய்யும் வகையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில், திறன் மிக்க கைவினைஞர்களைக் கொண்டு, 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியங்கள் தயாரித்தலுக்கான ஓராண்டு பயிற்சி அளிக்கப்படுமெனவும் இப்பயிற்சிக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை வழங்குவதுடன், பயிற்சியாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் மாத உதவித் தொகையும், பயிற்சியின் முடிவில் அவர்களுக்கு உரிய சான்றிதழும் வழங்கப்படும் என்றும், நடப்பாண்டில் இத்திட்டம் 83 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.5.2013 அன்று சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியங்களில் பயிற்சி அளிக்கும் வகையில் 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மூலப் பொருட்களும், உபகரணங்களும் அடங்கிய பெட்டியை பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கி பயிற்சித் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, 7 மகளிருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள். இந்தப் பயிற்சி திட்டத்தின் பயிற்றுநர்களாக தஞ்சாவூர் ஓவியத் தொழிலில் தேசிய மற்றும் மாநில விருது பெற்ற கைவினைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு ப. மோகன், தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளர் திரு ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.

நாள் : 8.11.2013